# விரைவான உடற்காப்பு ஊக்கிச் சோதனை (RAT)

## விரைவான உடற்காப்பு ஊக்கிச் சோதனையை எவ்வாறு சரியாகப் பயன்படுத்துவது

**அனைத்து விரைவான உடற்காப்பு ஊக்கிச் சோதனைகளுக்கும், நீங்கள் எப்போதும்:**

- சோதனை காலாவதியாகவில்லை என்பதைச் சரிபார்க்க வேண்டும்
- பரிசோதனைக்கு முன்னும் பின்னும் உங்கள் கைகளைக் கழுவவும் அல்லது சுத்தப்படுத்தவும்
- பொதியில் கொடுக்கப்பட்டுள்ள சோதனை வழிமுறைகளை கவனமாகப் பின்பற்றவும்



## நீங்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டியதும், செய்யக்கூடாததும்



### எச்சில் அல்லது உமிழ்நீரைப் பயன்படுத்தும் சோதனைகள்

**நீங்கள் சோதனைக்கு 30 நிமிடங்களுக்கு முன், பின்வருவனவற்றைச் செய்ய வேண்டாம்:**



- சாப்பிடுதல்
- புகைத்தல்
- உங்கள் பற்களைத் துலக்குதல்
- பசையை மெல்லுதல்



நீங்கள் பரிசோதனையை மேற்கொள்வதற்கு சற்று முன், 3 முதல் 5 பெரிய இருமல்களை முகக்கவசத்திற்குள் அல்லது திசுக்குள் செய்து மற்றவர்களிடமிருந்து விலகிச் செல்லுங்கள்.



### உங்கள் மூக்கிலிருந்து ஒரு மாதிரியைப் பயன்படுத்தும் சோதனைகள்



நீங்கள் சோதனை செய்வதற்கு முன் உங்கள் மூக்கைச் சீறவும்.



துடைப்பான் (Swab) எனப்படும் சிறிய குச்சியின் மென்மையான முனையைத் தொட வேண்டாம்.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், ஒவ்வொரு சோதனையையும் ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தமுடியும்.





விரைவான உடற்காப்பு ஊக்கிச் சோதனை பற்றிய மேலும் தகவலுக்கு,
**National Coronavirus Helpline**
ஐ அழைக்கவும்: **1800 020 080**
இலவச மொழிபெயர்த்துரைத்தல் உதவிக்கு விருப்பத்தேர்வு 8 ஐத் தேர்ந்தெடுக்கவும்.
நீங்கள் health.gov.au ஐயும் பார்க்கலாம்



Australian Government